பிரதமசெயலாளர் செயலகம்,வடக்குமாகாண சபை
ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

A9 வீதி,கைதடி,யாழ்ப்பாணம்.
A9 පාර,කයිදඩි,යාපනය.
A9 Road,Kaithady, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/BDT/04/19/CIR-BDT/2020 01.01.2020

பாதீட்டு சுற்றுநிருபக் கடித இல : **BDT/CL/01/2020**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
நியதிச்சட்ட நிறுவனத்தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**செலவினத்திற்கான அங்கீகாரம் வழங்குதல்**

**இடைக்கால வாக்குப்பணக் கணக்கு -2020**

மேற்படி விடயம் தொடர்பாக நிதி பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 31.12.2019ஆம் திகதிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல: 09/2019 இன் பால் தங்களது தனிப்பட்ட கவனம் ஈர்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் 2020ஆம் வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும்வரை தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசாங்க சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் வகையில் இடைக்கால வாக்குப்பணக் கணக்கொன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடமாகாண சபைக்கென தயாரிக்கப்பட்ட வாக்குப்பணக் கணக்கு விபரங்கள் கௌரவ ஆளுநர், வடக்கு மாகாணம் அவர்களால் அனுமதிக்கப்பட்டு குறித்த இடைக்கால வாக்குப்பணக் கணக்கின் கீழ் செலவினங்களை மேற்கொள்வதற்குரிய ஆணைப்பத்திரங்களிலும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

02. இதனடிப்படையில் கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் அதிகார இலக்கம் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பொதுச்சேவைகள் தொடர்பாக – 01/2020ஆம் இலக்க 31.12.2019 திகதியிடப்பட்ட பொது ஆணைப்பத்திரம்
2. முற்பணக்கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக – 01/2020ஆம் இலக்க 31.12.2019 திகதியிடப்பட்ட முற்பண ஆணைப்பத்திரம்

03. இடைக்கால வாக்குப்பணக் கணக்கில் மூலதனச் செலவினங்களுக்கான நிதி ஏற்பாடானது குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்களின் கீழ் 2019ஆம் ஆண்டின் செலவின மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு அவ் ஆண்டில் முடிவுற்ற வேலைகள் சம்மந்தமான கையிலுள்ள பிட்டைகளை தீர்வு செய்யும் முகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வாக்குப்பணக்கணக்கு அமுலில் உள்ள காலப்பகுதியில் புதிய ஆட்சேர்ப்பு, புதிய வழங்கல்கள் மற்றும் சேவைகள், புதிய கருத்திட்டம் தொடர்பான செலவினங்கள் என்பவற்றை மேற்கொள்ள முடியாது என்பதைக் கவனத்திற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

04. ஒவ்வொரு செலவினத்தலைப்பிலும் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டத்தின் கீழ் 30.04.2020ஆம் திகதி வரையான செலவினத்தினை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விரிவான செலவின மதிப்பீடொன்று தங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, குறித்த செலவினத் தலைப்புகள் தொடர்பில் இடைக்கால வாக்குப்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடு எல்லையை விஞ்சாத வகையில் செயற்படுவதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

05. மேலும் BDT/CIR/04/2019ஆம் இலக்க 2019.12.12ஆம் திகதிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் மூலம் அரசாங்க செலவினத்தை வினைத்திறனாக முகாமை செய்தல் மற்றும் நிதி ஒழுங்குகளைப் பேணுதல் தொடர்பாகவும் வீண் விரயங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும் சகல மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளரகள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

06. பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளை நடாத்தும் போது செலவுச்சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் முகமாக அவற்றை அரசாங்க நிறுவனங்களூடாக/ அரச கட்டிடங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதனை உரிய நிறுவனத்தலைவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். வெளிநாட்டுக் கடன் நிதியளிப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மேற்படி நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

07. இடைக்கால வாக்குப்பணக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 2020ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்படுமிடத்து, இவ் இடைக்கால வாக்குப் பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதி ஏற்பாடுகளையும் அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்

அ. பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

பிரதிகள்:

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வட மாகாணம். - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக
2. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், வட மாகாணம். - தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வட மாகாணம். - தகவலுக்காக